Literacy for a Billion

Movie: Uzhavan
Year: 1993

Song: Kara Mazhi
Lyricist: Vaali

மாரி மழை பெய்யாதோ
மக்கள் பஞ்சம் தீர
சார மழை பெய்யாதோ
சனங்க பஞ்சம் மாற
மயில்கள் ஆடும்
கொண்டாட்டம் போடும்
வானம் கருக்கையிலே
குயில்கள் நாளும்
தெம்மாங்கு பாடும்
சோலைதான் இங்கில்லையே
மாரி மழை பெய்யாதோ
மக்கள் பஞ்சம் தீர
சார மழை பெய்யாதோ
சனங்க பஞ்சம் மாற

சட்டியிலே மாகரைச்சு
சந்தியிலே கோலமிட்டு
கோலம் அழியும்வரை
கோடை மழை பெய்யாதோ
வானத்து ராசாவே
மழைதரும் புண்ணியரே
சன்னல் ஒழுகாதோ
சாரமழை பெய்யாதோ
வடக்கே மழை பெய்ய
வரும் கிழக்கே வெள்ளம்
கொளத்தாங் கரையிலே
ஈரல் துள்ளும்
கிழக்கே மழை பெய்ய
கிணரெல்லாம் புதுவெள்ளம்
பச்சை வயக்காடு
நெஞ்சை கிள்ளும்
நல்ல நெல்லு
கதிர் அறுத்து புள்ளே
நெறி நெறியா கட்டு கட்டி
அவள் தட்டு கொண்டு

போகையிலே
நின்னு கண்ணடிப்பான்
அத்தை மகன்
உழவன் சிரிக்கணும்
உலகம் சிரிக்கணும்
மின்னல் இங்கு படபடக்க
மாரி மழை பெய்யாதோ
மக்கள் பஞ்சம் தீர
சார மழை பெய்யாதோ
சனங்க பஞ்சம் மாற
மயில்கள் ஆடும்
கொண்டாட்டம் போடும்
வானம் கருக்கையிலே
குயில்கள் நாளும்
தெம்மாங்கு பாடும்
சோலைதான் இங்கில்லையே
மாரி மழை பெய்யாதோ
மக்கள் பஞ்சம் தீர
சார மழை பெய்யாதோ
சனங்க பஞ்சம் மாற

வரப்புலே பொண்ணிருக்கு
பொண்ணு கையில்
கிளி இருக்கு
கிளி இருக்கும் கைய நீ
எப்ப பிடிப்பே
விதையெல்லாம் செடியாகி
செடியெல்லாம் காயாகி
காயை வித்து உன்
கையை பிடிப்பேன்
ஒரு தண்டட்டி போட்ட புள்ளே
சும்மா தளதளன்னு
வளர்ந்த புள்ளே
ரா தவளை எல்லாம்
குலவையிட

Literacy for a Billion

நான் தாமரை உன் மடிமேலே
கனவுகள் பக்கணும்
கழனி செழிக்கணும்
பழியை தீர்க்கிறான்
வானம் கருகருக்க
மாரி மழை பெய்யாதோ
மக்கள் பஞ்சம் தீர
சார மழை பெய்யாதோ
சனங்க பஞ்சம் மாற
மயில்கள் ஆடும்
கொண்டாட்டம் போடும்
வானம் கருக்கையிலே
குயில்கள் நாளும்
தெம்மாங்கு பாடும்
சோலைதான் இங்கில்லையே
மாரி மழை பெய்யாதோ
மக்கள் பஞ்சம் தீர
சார மழை பெய்யாதோ
சனங்க பஞ்சம் மாற
மாரி மழை பெய்யாதோ
மக்கள் பஞ்சம் தீர
சார மழை பெய்யாதோ
சனங்க பஞ்சம் மாற

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.